# வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ்

## வணிகத் தொடர்பான சொற் பட்டியல்

*தமிழ் வளர்ச்சித்துறை வெளியீட்டுக்குச் சில மாற்றங்கள்*

குடந்தை வீரா. இராசகோபாலன், B.O.L.,M.A.,
புலவர் கு. வெற்றியழகன்,

மார்ச்சு
**1997**

வெளியீடு : சேது அம்மாள் பதிப்பகம்
இராயப்பேட்டை, சென்னை–14.

விலை : உரூபாய் அய்ந்து

மொழியாக்கம் காலத்துக்கேற்ற வகையில் எளிமையாகவும், இனிமையாகவும், பாமரர்களுக்கு எளிதில் விளங்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். வணிகர்கள் மிகுதியாகப் பாமரர்களோடு பழகுபவர்கள்.

மொழியாக்கம் வணிகர்களைக் குழப்புவதாகவோ, மருளவைப்பதாகவோ அமைதல் கூடா. வணிகர்கள் விரும்பி எளிதில் ஏற்கக்கூடிய வகையில் சொல்வதற்கு எளிதாகவும், தெளிவாகவும், கூடுமான வரை சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

நாங்கள் தமிழ்ப் பேரறிஞர்களில்லை யென்றாலும், தமிழ் ஆர்வத்தால் **1996, தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித்துறை "வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ்"** என வெளியிட்டுள்ள **"வணிகத் தொடர்பான சொற் பட்டியலை"** ஓரளவு சிந்தித்து எங்களுக்குத் தோன்றிய கருத்துகளை, முன்னுரையில் **"இப்பட்டியலுக்குச் சேர்ப்பும், திருத்தமும் வரவேற்கப்படுவதற்குரியன"** என்று குறித்துள்ளமையால் தாங்கள் மேலான பார்வைக்கு வைக்கலானோம்.

1. **Accountant** ... கணக்கர், கணக்காளர் (*கணக்காய்வாளர் அன்று*)

**Accountant General** ... கணக்காளுகைத் தலைவர்

2. Acknowledgement ... பெறுகைச் சீட்டு, ஒப்புகைச் சீட்டு, ஒப்புரைச் சீட்டு

6. Adhesives ... பசை

7. Adhesives Stamp ... பசை வில்லை

9. Agarbathies ... ஊது வத்திகள், அகில் வத்திகள்

10. **Agency** ... முகமை

**Agencies** ... முகமைகள்

**Agent Organisation** ... முகவரமைப்பு

12. Agro Centre ... வேளாண்மை மையம், வேளாண் மையம்

18. **Alarm Time Piece** ... அலறிக் கடிகாரம்

**Alarm** ... அலறி (*அலறுதல் பொருளன்று. அடித்தல், ஒலித்தல்*)

**Alarm Time** ... அடிக்கும் காலம், ஒலிக்கும் நேரம்

**Piece - Clock** ... கடிகாரம்

19. Aluminium Vessel Store ... அலுமினியப் பாத்திரக் கடை

21. **And Sons** ... மற்றும் மகன்கள் (மற்றும் மகார், *மகாரும் மக்களும், மக்கள் என்பன பொதுச்சொற்கள். ஆண் பெண் - இருபாலாரையும் குறிக்கும். **And Sons and Daughters***)

22. **Arcade** ... வளைவுகள்

**Arch** ... வில் வளைவு, மேல் வளைவு

23. Artisan ... கம்மியர், கைவினைஞர்

24. **Artist** ... ஓவியர்

**Artiste** ... கலைஞர்

25. Art Prints ... கவினச்சீடுகள், கவினச்சுகள்
32. **Auditor** ... கணக்காய்வாளர், தணிக்கையாளர்
**Auditor General** ... கணக்காய்வுத் / கணக்காயர்த் தலைவர்
35. Audio Centre ... கேட்பொலி மையம், கேட்பொலியகம், ஒலியகம், ஒலிநாடா மையம்
37. **Automatic Watch** ... தானியக்கக் கடிகாரம்
**Wall Clock** ... சுவர்க் கடிகாரம்
**Watch Company** ... கடிகாரக் கடை, கடிகாரக் குழுமம்
**Watch Repairer** ... கடிகாரம் பழுதுபார்க்குநர், கடிகாரம் பழுதுபார்ப்பவர்
39. Autorickshaw ... தானியிழுவை, தானி
41. Auto Spare Industries ... தானி உதிரியுறுப்புத் தொழிலகம்
42. Auto Spare Parts ... தானி உதிரியுறுப்புகள், தானி உதிரிப்பாகங்கள்
45. **Bakers & Confectioners** ... வறட்டப்பம் மற்றும் தின்பண்டம் செய்யகம், வறட்டப்பம் மற்றும் தின்பண்டம் விற்பகம்
48. **Bankers** ... நிதியர், வட்டிக்கடைக்காரர்
49. **Bar** ... வழக்கறிஞர் குழாம், அருந்தகம்
50. **Bar Soap** ... நீள் சவர்க்காரக் கட்டி, நீள் சலவைக்கட்டி, நீள் சவர்க்காரம்
52. **Bazaar** ... அங்காடி
**Bazaar Road** ... அங்காடிச் சாலை
**Bazaar Street** ... அங்காடித் தெரு, அங்காடி வீதி
53. **Beauty Parlour** ... அழகூட்டு நிலையம், ஒப்பனைமனை
56. **Beeda Stall** ... வெற்றிலைப் பாக்குச் சுருள் கடை
**Beeda** ... வெற்றிலைப் பாக்குச் சுருள்
58. Benefit Fund ... நலநிதியம், நலநிதி
60. Binder ... கட்டுநர், கட்டகர்

61. Binding Works ... கட்டகம், கட்டகப் பணியகம், கட்டுப் பணியகம்

62. Biscuits ... மாச்சில்லுகள், மாப்பண்டங்கள் (*மாவுப் பண்டங்கள்*)

63. Block Makers ... அச்சுரு வினைஞர், அச்சுரு தொழில், அச்சுரு வினைஞரகம், அச்சுரு தொழிலகம்

64. **Blue Metals** ... கருங்கற்கள், கருங்கற் பாறைகள், கருங்கற் சரளை

65. Boarding & Lodging ... உணவு மற்றும் தங்குமிடம், உண்டுறையகம், உணவு உறையுள்

66. Body Builder ... உடற்கட்டானவர்

Vehicles Body Builders ... ஊர்தி உடலங்கட்டுநர்

69. Breweries ... வடிப்பகம், வடிப்பாலை

70. Brickfield ... செங்கற் சூளை, காளவாய்

71. Brick Works ... செங்கல் பணியகம், செங்கல் தொழிலகம்

72. Broiler Centre ... இறைச்சிக் கோழி மையம், இறைச்சிக் கோழிக் கடை

73. **Brothers** ... அண்ணன் தம்பிகள், உடன் பிறப்பாளன்கள், உடன்பிறவாத் தோழர்கள் (*உடன் பிறப்புகள் பொதுச்சொல். ஆண் பெண் இருபாலாரையும் குறிக்கும்*)

**Sisters** ... தங்கை தமக்கைகள், உடன்பிறப்பாட்டிகள், உடன்பிறவாத் தோழிகள்

**Brothers and Sisters** ... உடன் பிறப்புகள், உடன்பிறவா உடன்பிறப்புகள்

| | |
|---|---|
| 78. Bunk | ... பெட்டிக்கடை, சிறுகடை |
| 79. Bureau | ... செய்தியறி அலுவலகம், புள்ளி விவரப் பணிமனை, அரசியல் துறையரங்கம் |
| 81. Butcher | ... இறைச்சிக் கடைக்காரர், இறைச்சி வெட்டுநர், ஊன் விலங்கு வெட்டுநர் |
| 82. Button Centre | ... பொத்தான் மையம், பொத்தான் கடை |
| 83. Cables | ... கம்பி வடங்கள், வடக் கம்பிகள் |
| Electric Cables | ... மின் வடங்கள் |
| Telephone Cables | ... தொலைபேசி வடங்கள் |
| 84. Cabs | ... வாடகைச் சிற்றுந்துகள், வாடகை வண்டிகள் |
| 85. Cafe | ... சிற்றுண்டியகம், சிற்றுணவகம் |
| 86. **Cafeteria** | ... தானெடுத்துண்ணலகம் |
| 88. Camp | ... முகாம், தங்கல் |
| 89. Camphor Works | ... கற்பூரப் பணியகம் |
| 91. **Cane Works** | ... பிரம்புப் பணியகம், பிரம்புப் பணிகள், பிரம்பு வேலைகள், பிரம்புத் தொழிலகம் |
| **Cane** | ... பிரம்பு, கைத்தடி |
| **Sugar Cane** | ... கரும்பு |
| 92. Canteen | ... பணிமனைச் சிற்றுண்டியகம் |
| 93. Canvas | ... கித்தான், சித்திரப்படாம், திரைச்சீலை |
| **Canvass** | ... நுண்ணாய்வு, தேர்தலாதரவு நாட்டம், ஆதரவுக்கோரிக்கை, வாக்குச் சேகரிப்பு |
| 94. Carpentry Works | ... தச்சுப் பணியகம், தச்சுப் பணிகள், தச்சு வேலைகள், தச்சுத் தொழிலகம் |
| 95. Cash Counter | ... பணம் கொடுக்கல் வாங்கலிடம், பணம் செலுத்தல் பெறுதலிடம் |
| 97. Ceiling Fan | ... மேற்றள மின் விசிறி |
| 98. Cement | ... பசை மண், சீமைக்காரை, சாந்து |

99. Centre ... மையம் எனப் பொருள் கொள்ளலே சிறக்கும்
Middle ... நடு, நடுப்பகுதி, இடையிடம், இடைப்பகுதி
100. Challan ... செலுத்துச் சீட்டு
103. Chicken Centre ... கோழியிறைச்சி மையம், கோழியிறைச்சிக் கடை, கோழிக் கடை
104. Chit Fund ... சீட்டு நிதியம், சீட்டு நிதியகம், சீட்டு நிதிநிறுவனம்
106. Clinic ... தனி மருத்துவமனை, மருத்துவ அகம்
107. Coffee Filter ... குளம்பி வடிகட்டி, குளம்பி வடி
108. Coffee House ... குளம்பியகம்
Coffee Hotel ... குளம்பியருந்தகம்
109. Coffee Mart ... குளம்பிக் கொட்டை, தூள் அங்காடி - குளம்பிக் கொட்டை, தூள் விற்பகம்
Coffee Nut ... குளம்பிக் கொட்டை
Coffee Powder ... குளம்பித் தூள்
118. Computer Center ... கணிப்பொறி மையம், கணினி மையம்
122. Confectioners ... தின்பண்டம் செய்யகம், தின்பண்டம் விற்பகம்
124. **Consultant** ... உறுபொருள் உரைப்பவர், அறிவுரை பகர்பவர், அலுவல் துறை அறிவுரையாளர்
129. Cool Drinks ... குளிர்பானங்கள்
130. **Corporation** ... மாநகராட்சி, மாநகராண்மைக் கழகம், இணையம், நிறுவகம், நிறுவனம்
132. **Counter** ... தனியிடம் (*தனியிடம் பொதுச்சொல். ஒன்றுடன் இணையின் சிறப்புச் சொல்.*)
**Cash Counter** ... பணம் கொடுக்கல் வாங்கலிடம், பணம் செலுத்தல் பெறுதலிடம்
**Cashier** ... காசாளர்

**Ticket Counter** ... சீட்டு வழங்குமிடம் (*சீட்டுப் பொதுச் சொல். ஒன்றுடன் இணையின் சிறப்புச் சொல்.*)

**Bus Ticket** ... பேருந்துப் பயணச் சீட்டு

**Train Ticket** ... தொடர்வண்டிப் பயணச்சீட்டு

**Cinema Ticket** ... திரைப்பட நுழைவுச் சீட்டு

**Drama Ticket** ... நாடக நுழைவுச் சீட்டு

**Sales Counter** ... விற்பனையிடம்

133. **Courier** ... விரைவஞ்சல்

134. **Covering** ... மூடும் பொருள் (*மூடும் பொருள் பொதுச் சொல். ஒன்றுடன் இணையின் சிறப்புச் சொல்.*)

**Covering Jewel** ... முலாமணி, முலாம் அணிகலன்

**Gold Covering Jewel** ... பொன் முலாம் நகை, தங்க முலாம் அணிகலன்

**Silver Covering Jewel** ... வெள்ளி முலாம் அணிகலன் அல்லது நகை

**Covering Letter** ... வேண்டுதல் மடல்

139. Cycle Company ... மிதிவண்டிக் குழுமம், மிதிவண்டியகம்

Hire Cycle Shop ... வாடகை மிதிவண்டிக் கடை

140. Cycle Mart ... மிதிவண்டி அங்காடி, மிதிவண்டி விற்பகம், மிதிவண்டிக் கடை

Cycle Repairer ... மிதிவண்டி பழுதுபார்ப்பவர், மிதிவண்டி பழுது பார்க்குநர், மிதிவண்டி பழுதுபார்க்குமிடம், மிதிவண்டி பழுதுபார்ப்பகம்

141. Cyclerickshaw Manufacturers ... மிதியிழுவை உற்பத்தியாளர், மிதியிழுவை உருவாக்கம்

149. **Departmental Store** ... துறைப் பண்டகம், பணியரங்கப் பண்டகம்

156. Distilleries ... வடிமனை, வடிவாலை

157. Drinks ... பானங்கள்

159. Dress Paradise ... ஆயத்த ஆடையகம், ஆடை உலகம்

160. Druggists ... மருந்தாளர்கள், மருந்துக் கடைக்காரர்கள்

172. Emporium ... பண்டப்பெருநிலையம், விற்பனைப் பெருநிலையம், வணிக மையம்

173. Emulsion ... பசைக் குழம்பு, பால்நிறக் குழம்பு

174. **Enclave** ... நில எல்லைப் பகுதி, நில எல்லை

175. Engineer ... பொறிவலாளர், பொறியாளர்

180. **Ever Silver** ... கறுக்கா வெண்தகடு

**Ever Silver Vessels Store** ... கறுக்கா வெண் தகட்டுப் பாத்திரக் கடை

189. Fast Food ... விரைவுணவு, விரைவு உணவகம்

203. Florist ... மலர்ப்பண்ணையாளர், மலர் விற்போர், பூ விற்போர்

204. Floodlight ... பேரொளி, ஒளிமயம்

210. Footwears ... காலணிகள், மிதியடிகள், காலணியகம், மிதியடியகம்

212. Foundry ... வார்ப்பாலை, வார்ப்பகம்

213. Frame Works ... படக்கடை

224. Granites ... திண்பாறைகள், கருங்கற்கள்

229. Groceries ... மளிகைக் கடை, பலசரக்குக் கடை

237. Hardwares ... வன்பொருட் கடை, வன்பொருளகம்

245. Home Appliance ... வீட்டுப் பயன்படு பொருள்

249. House ... வீடு, இல்லம்

254. Initial ... சொல் முன்னெழுத்து, பெயர் ஆரம்ப எழுத்து

260. Invisible Darning ... புலனாகாத் தையல்

262. Iron Work ... இரும்புத் தொழில், இரும்பு வேலை, இரும்புத் தொழிலகம்

Iron Works ... இரும்பு உற்பத்தியகம், இரும்பு வார்த்து உருக்குமிடம், இரும்புப் பொருள் செய்யகம்

265. **Jeweller/ Jewellery** ... பொற்கொல்லர், அணிமணி செய்பவர், அணிகல வணிகர், நகை வணிகர் /அணிகல விற்பகம், நகை விற்பகம்

267. **Job Works** ... குறிப்பிட்ட தனிப்பணிகள், குறிப்பிடப்பட்ட சிறுபணிகள் (***Job Works*** *பொதுச் சொல். அச்சுப் பணிக்கு மட்டும் அன்று. எல்லாப் பணிகளுக்கும் பொருந்தும்.*)

268. **Juices** ... சாறுகள் (*பழச்சாறுகள் அல்ல. சாறுகள் பிழிந்தெடுப்பவை. சாறுகள் பொதுச் சொல். ஒன்றுடன் இணையின் சிறப்புச் சொல். ஆரஞ்சுச் சாறு, புளியஞ் சாறு, வெற்றிலைச் சாறு*)

**Fruit Juices** ... பழச்சாறுகள்

**Soup** ... வடிசாறு (*வடிசாறு பொதுச் சொல். வேக வைத்து எடுப்பது. ஒன்றுடன் இணையின் சிறப்புச் சொல்.*)

**Chicken Soup** ... கோழி வடிசாறு

**Mutton Soup** ... கறி வடிசாறு (*ஆட்டிறைச்சி வடிசாறு*)

**Beef Brewis** ... மாட்டிறைச்சி வடிசாறு

**Tamato Soup** ... தக்காளி வடிசாறு

273. **Lamination** ... கவின் மேற்றாள், காப்புறை
274. Laser Printing ... ஒளிக் கதிரச்சு, ஒளியச்சு
280. Lorry ... பார உந்து, சரக்குந்து
281. Lorry Booking Office ... பார உந்துப் பதிவகம், சரக்குந்துப் பதிவகம்
285. Lunch Home ... நண்பகலுணவகம்
286. Machine Tools ... இயந்திரக் கருவிகள்
291. Manufacturers ... தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், உருவாக்கிகள்
293. Marbles ... சலவைக் கற்கள், பளிங்குக் கற்கள், மாக்கற்கள் (*மாவுக் கற்கள்*)
302. Metal Mart ... உலோக அங்காடி, உலோகக் கடை, பொன்னங்காடி
303. Metal Works ... உலோகத்தொழில், பொன்ம வேலை, உலோகத் தொழிலகம், பொன்மத் தொழிலகம்
304. Metropolitan ... தலைநகர், பெருநகர்
307. Modelling ... விளம்பர உருவத் தோற்றம், விளம்பரத்திற்குரிய தோற்றம்
308. Modern ... புது நாகரிகப் பண்பாடு, புதுப்பாணி, நாகரிகம்
309. Motor Cycle ... விசை மிதியுந்து, மிதி விசையுந்து
315. Nail Polish ... நகப்பூச்சு
322. Nylon ... செயற்கை நூற்றுகில்
323. Offset ... எதிரீடு அச்சு, எதிர்ப்படிக் கல்லச்சு
325. Oil Stores ... எண்ணெய்க் கடை, எண்ணெய் விற்பகம்
329. **Opticals** ... விழியாடியகம், கண்ணாடியகம் (*ஆடி பொது. குழியாடி, வட்ட ஆடி வகை. கண்ணுக்கு அணிந்த பின் கண்+*

*ஆடி = கண்ணாடியானது. பின் எல்லாவற்றுக்கும் கண்ணாடி பொதுப் பெயர் ஆனமையால் மூக்குக் கண்ணாடி ஆயிற்று. எனவே, விழியாடி, விழியாடிக் கடை, விழியாடியகம் எனலே சிறக்கும்)*

330. **Optician** ... விழியாடியர், விழியாடி விற்பன்னர்
334. **Paging** ... பக்க எண் குறிப்பீடு, பக்கக் குறியீட்டுமுறை
335. **Pager** ... செய்தியறிவிப்பான், செய்தி தெரிவிப்பான், செய்திவாங்கி
336. Paints ... சாயங்கள், வண்ணப் பொருள்கள், வண்ணப் பூச்சுகள்
337. Pan Stall ... வெற்றிலைப் பாக்குக் கடை
339. Passport ... கடவுச் சீட்டு, பயண இசைவுச்சீட்டு
340. Paradise ... பெருமகிழ்வுநிலை, பேரின்பம்
341. Parcel Service ... சிப்பம் பெறல் அனுப்பல் பணி, சிப்பம் கொடுக்கல் வாங்கலகம்
343. Pedestal Fan ... தரை மின் விசிறி
Table Fan ... மேசை மின் விசிறி
346. Petrol ... கல்நெய்(*கல்லெண்ணெய்*), நிலநெய்(*நில எண்ணெய்*)
Petroleum ... பாறை நெய் (*பாறை எண்ணெய்*), தாது நெய் (*தாது எண்ணெய்*)
Kerosene ... மண்ணெய் (*மண்ணெண்ணெய்*)
349. Photo Blocks ... நிழற்பட அச்சுரு, பட அச்சுரு, புகைப்பட அச்சுரு, ஒளிப்பட அச்சுரு
350. Photo Studio ... நிழற்பட நிலையம், புகைப்பட நிலையம், ஒளிப்பட நிலையம்

353. Plastic Industry ... செயற்கை மண் தொழிலகம், குழைமத் தொழிலகம்

354. Platform ... பேச்சு மேடை, நடை பாதை

355. Plaza ... பலர் கூடுமிடம்

356. Plot ... மனையிடம், மனைக்கூறு

359. Polish Works ... மெருகேற்றும் பணி, மெருகூட்டும் பணி, பளபளப்பூட்டும் பணி, மெருகேற்றும் பணியகம், மெருகூட்டும் பணியகம், பளபளப்பூட்டும் பணியகம்

360. Poly Clinic ... தனியார் பல்துறை மருத்துவமனை, பல்துறை மருந்தகம், பல்துறை மருத்துவப் பயிற்சி

370. **Private Limited** ... **வரையறுக்கப்பட்ட தனிமுறைக்குழு, வரைநிலைத் தனிமுறைக்குழு, தனியார் குழுமம்**

372. Profiles ... சிறப்புக் குறிப்புகள், பண்போவியக் குறிப்புகள்

373. Promoters ... மேம்படுத்துநர், வளர்க்குநர், ஆதரவளிப்பவர்

374. **Provisions Store** ... **பலசரக்குக் கடை**

**Provisional** ... **தற்பொழுதைக்கான, தற்போது**

376. Quick Meals ... விரைவுணவு

379. Ration ... பங்கீடு, வீதப்பங்கு

380. Ready-made Dress Centre ... ஆயத்த ஆடை மையம், ஆயத்த ஆடையகம்

381. Real Estate ... வீடு, மனை விற்பகம்

392. Rolling Shutter ... சுருள் கதவு

393. Roofings ... கூரை வீடுகள், கூரைகள்

394. Rose Milk ... நறுமணச் செம்பால், நறுமணப் பால்

395. Rubber ... தொய்வம், அழிப்பான்

| | |
|---|---|
| Tyre | ... தொய்வ உருளை |
| 396. Rubber Stamp Works | ... தொய்வ முத்திரைப் பணி, தொய்வ முத்திரைப் பணியகம் |
| 404. Scooter | ... மிதியிழுவிசையுந்து |
| 408. Service Centre | ... பணி மையம் |
| 412. Sewing Traders | ... தையல் இயந்திர விற்பன்னர், தையல் இயந்திர விற்பகம், தையல் பொருளகம் |
| 413. **Shampoo** | ... குளியல் குழம்பு, சவர்க்காரக் குழம்பு |
| 417. Sherbet | ... நறும்பானம் |
| Syrup | ... இன்கொழுநீர், இன்தேம்பாகுநீர் |
| 418. **Shoes** | ... மிதியடிகள், காலணிகள் |
| **Boots** | ... புதை மிதியடி, மூடு காலணி |
| **Shoes Mart** | ... காலணிகள் விற்பகம் |
| 427. Soap | ... சவர்க்காரக் கட்டி, சலவைக் கட்டி, குளியல் கட்டி |
| 428. Soda Factory | ... காரவளி நீர்த்தொழிலகம், உவர்க்கார நீர்ப் பணிமனை |
| Soda | ... காரவளி நீர், உவர்க்கார நீர் |
| 431. Soft Wear | ... மென்பொருள், மெல்லிய ஆடை |
| 437. Stadium | ... விளையாட்டரங்கம், பயிற்சியரங்கம் |
| 442. Stationery | ... எழுதும் பொருள்கள் |
| 447. Storage | ... சேமிப்பகம் |
| 449. Straw Board | ... வைக்கோலட்டை |
| Straw | ... உறிஞ்சிக்குழல், உறிஞ்சி |
| 458. **Tailors** | ... தையற்கலைஞர், தையற்காரர் (தையலர் மகளிரையும் *குறிக்குமாதலால் கேளிக்கைச் சொல்லாகக் கையாளப்படும்*) |
| 459. Talkies | ... பேசும்படக் கொட்டகை |

460. Tannery ... தோல் பதனீட்டகம், தோல் பதனீட்டுப் பணிமனை, தோற்கிடங்கு

462. Tap ... வடிமுனைக் குழாய், பாய்குழாய்

465. Tea Stall ... தேனீர்க்கடை, தேனீரகம்

466. Telefilm ... தொலைக்காட்சித் திரைப்படம்

470. Theatre ... திரைப்படவரங்கம், நாடகக் கொட்டகை, அரங்கம்

476. Tourist Taxi ... சுற்றுலா வாடகை உந்து

Tourist Van ... சுற்றுலாச் சிற்றுந்து

Tourist Bus ... சுற்றுலாப் பேருந்து

477. Tower ... கோபுரம்

Ivory Tower ... இன்பமாடி, இன்பக் கோபுரம்

479. Tractors ... பார இழுவைகள், கலப்பை இழுவைகள்

483. Traffic ... போக்குவரத்து நெரிசல், ஊர்திகள் நடமாட்டம்

484. Trailer ... இழுவைக்கலம், இழுக்கப்படும் வண்டி, இணைப்புப் பெட்டி

486. Travels ... பயண ஏற்பாட்டாளர், பயண ஏற்பாட்டகம்

487. Truck ... பார வண்டி, தள்ளு வண்டி

493. Typewriter Service Centre ... தட்டச்சுப் பணி மையம், தட்டச்சுப் பழுது பார்ப்பகம், தட்டச்சுப் பயிலகம்

497. Varnish ... நெய்ச்சாயம் (*எண்ணெய்ச் சாயம்*), வண்ண மெருகுநெய்(*வண்ண மெருகெண்ணெய்*)

498. Vegetarian Hotel ... காய்கறி உணவகம், சைவ உணவகம்

Vegetable Market ... காய்கறிச் சந்தை

Vegetable Shop ... காய்கறிக் கடை

| | | |
|---|---|---|
| | Non-Vegetarian Hotel | ... புலால் உணவகம், அசைவ உணவகம் |
| 504. | Water Paint | ... நீர்ச்சாயம் |
| 509. | Works | ... பணிகள், வேலைகள் |
| 511. | Xerox | ... நகலெடுத்தல், நகலகம், நகல் |
| 515. | **Zoological Garden** | ... விலங்கினக் காட்சியகம் (*உயிரியல் பூங்கா எனின் பொருள் விபரீதம். தாவரமும், மக்களும் அடங்குவர். உயிரியல் பொதுச் சொல்.* ***Garden*** *– காட்சியகத்தைக் குறிக்கும்.*) |
| | **Botanical Garden** | ... தாவரவினக் காட்சியகம் |
| | **Humanism** | ... மக்களியல், மக்கள் பொதுமை நல இயல் |

---

இச்சிறு நூல் உருவாவதற்கு உறுதுணை புரிந்த உழுவலன்பர் உயர்திரு நெல்லிக்குப்பம் **K.R.**சபாபதி அவர்களை உவகையுடன் உளமாரப் பாராட்டிப் போற்றுகிறோம்.

இது குறித்துக் கருத்துரைக்க விழைவோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்க.

குடந்தை வீரா. இராசகோபாலன், B.O.L.,M.A.,
புலவர் கு.வெற்றியழகன்,
**39,** ஒற்றையர் இல்லம் (S.P.Q.),
நடிப்பிசைப் புலவர் கே.ஆர் இராமசாமி நகர்(இலாயிடு குடியிருப்பு),
இராயப்பேட்டை, சென்னை **– 600 014.**